அரசாங்க அதிபர்,

அரசாங்க அதிபர் அலுவலகம்,

திருகோணமலை.

கனம் ஐயா,

**<u>அனுமதியின்றி கிறிஸ்தவ தேவாலயமொன்றை அமைக்கின்றமை தொடர்பில் ஆட்சேபனை தெரிவித்தல்.</u>**

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகமப் பிரதேச செயலாளர் பிரிவில் புதுக்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவில் (228J) தெலுங்குநகர் எனும் கிராமத்தில் அனுமதியின்றி கிறிஸ்தவ தேவாலயமொன்று நிர்மானிக்கப்பட்டு வருகின்றது. எனினும் இவ்வாறு தான்தோன்றித்தனமான முறையில் தமது விருப்பின் பேரில் மாத்திரம் கிறிஸ்தவ தேவாலயமொன்றை நிர்மானிப்பதானது தற்போது நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கு முரணானது என்பதோடு, தற்பொழுதாகின்ற போது தெலுங்குநகர் கிராமத்தில் அனுமதிபெற்ற கிறிஸ்தவ தேவாலயமொன்றுக்கான தேவையும் இல்லை. மேலும், பின்வரும் காரணங்களின் அடிப்படையிலும் குறித்த கிறிஸ்தவ தேவாலயத்தை நிர்மானிப்பது தொடர்பில் எமது ஆட்சேபனைகளைத் தெரிவித்துக்கொள்கின்றேம்.

01. புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் அனுமதி பெறப்பட்டிருக்காமை.

02. கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு இடையிலான தூரம் மிகவும் குறைவடைதல்.

03. குறித்த பிரதேசத்தில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளமை.

04. பிரதான கிறிஸ்தவ தேவாலயத்திலிருந்து பிரிந்து, தனியான தேவாலயமொன்றை முன்னெடுத்துச் செல்வதற்காக நடவடிக்கை எடுக்கின்றமை.

05. இக்கிராமத்தில் சமயங்களுக்கிடையலான சகவாழ்வுக்கும் நல்லிணக்கத்திற்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்படுகின்றமை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான விடயங்களின் காரணமாகவும், இத்தேவாலயத்தை நிர்மானிப்பதானது தற்போது நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கு முரணானது என்பதனாலும் எமது தேவாலயத்தினால் இது பற்றித் தங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு, இத்தேவாலயத்தை நிர்மானிப்பது தொடர்பில் எமது தேவாலயம் ஒட்டுமொத்தமாக ஆட்சேபனைகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இது தொடர்பில் தங்களது மேலான கவனத்தைச் செலுத்தி இத்தேவாலயத்தை நிர்மானிப்பதனையும், முன்னெடுத்துச் செல்வதனை முழுமையாகவே நிறுத்துமாறு தங்களிடம் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

இவ்வண்ணம், உண்மையுள்ள,

*ஒப்பம்.*